<u>19 வது பெருநகர குற்றவியல் நீதிமன்றம்,</u>
<u>எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை – 3.</u>

தேதி 28.10.2025

| | | |
|---|---|---|
| பட்டியல் வழக்கு எண் CC | – | 3424/2018 |
| வாதி/எதிரி/நீதிமன்ற தரப்பு | – | பு.த.சா. 1 |
| பெயர் | – | செழியன் |
| தந்தை பெயர் | – | லஷ்மணன் |
| வயது | – | 61 |

1873–ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டம் 10–வது வகையங்கள்படி இன்று 28.10.2025 நான் திருமதி. லஷ்மி இளநிலை உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதிமொழி கூறப்பட்டு சாட்சியம் அளிக்கப்படுகிறது. சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>**சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யப்படுகிறது**(2,3,8 முதல் 10 வரையிலான எதிரிகள் மனுவின் பெயரில் ஆஜரில்லை. 2 முதல் 10 வரையிலான எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர்)</u>

எதிரி நிறுவனத்தின் விவரங்கள் அடங்கிய Ministry of Corporate Affairs இணையதளத்தில் இருந்து 28.06.2024 அன்று download செய்து எடுக்கப்பட்ட printout பிரிவு 63 BSA சான்றிதழுடன் **பு.த.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது(2 முதல் 10 வரையிலான எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் அவர்கள் பு.த.சா.ஆ.16 ல் யார் அந்த ஆவணத்தை வழங்கினார் என்பதற்கு முறையான கையொப்பம், சீல் எதுவும் இல்லை என்றும் இந்த ஆவணம் முறையாக சான்றிடப்பட்ட ஆவணம் இல்லை என்றும் இந்த வழக்கு பரிமாற்றம் நடந்த காலகட்டத்திற்குரிய ஆவணம் இல்லை என்றும் உரிய இந்திய சாட்சிய சட்டத்தின் கீழான சான்றிதழ் தாக்கல்

செய்யப்படவில்லை என்றும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு மேற்கண்ட ஆட்சேபனைகளுக்கு உட்பட்டு பு.த.சா.ஆ.16 குறியீடு செய்யப்படுகிறது). பு.த.சா.ஆ.16 ல் ஒன்றாம் எதிரி நிறுவனம் Private Limited Company என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பு.த.சா.ஆ.16 ல் Date of incorporation 07.10.1987 என குறிப்பிடப்படுகிறது. வழக்கு காசோலை 2000 ம் வருடத்தில் கொடுக்கப்பட்டது.

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டு எதிரி முன்னிலையில் சாட்சிக்கு படித்து காட்டி சரி என்று அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது,

Sd/- Mrs. P. Magalakshmi

XIX Metropolitan Magistrate,
Egmore @ Allikulam, Chennai-03.